தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# மரப்பெருக்கு நிறுவனத்தில் சர்வதேச மலை தினம்

**கோவை, டிச.14–**

வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் உள்ள சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில், சர்வதேச மலை தினத்தை முன்னிட்டு, மரக்கன்று நடும் விழா நடந்தது.

வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் இயக்குனர் குன்னி கண்ணன் நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசுகையில், ''மலைகள் சுற்றுச்சூழல் அமைப்புகளை பாதுகாப்பதில், முக்கிய பங்கு வகிக்கின்றன. சுற்றுலா, பொழுதுபோக்கு, கல்வி ஆகியவற்றுக்கும் முக்கிய காரணியாக உள்ளது. இயற்கை வளங்கள், வனவிலங்குகளை பாதுகாக்கிறது. இது தவிர, சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துகிறது. கலாசார, பாரம்பரியத்தை பாதுகாக்கிறது,'' என்றார்.

தொடர்ந்து, முது நிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், தலைமை விஞ்ஞானி மற்றும் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர் யசோதா, இ.என்.வி.ஐ.எஸ்., மூத்த திட்ட அலுவலர் விக்னேஸ்வரன் ஆகியோரும், பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.

75. News in Dinamalar, Coimbatore, 14.12.2022, Observance of International Mountain Day by IFGTB ENVIS.